இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள். 4688-4689/2022

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 8119-8120/2019-**லிருந்து எழுகிறது)**

எஸ்.சந்திரசேகரன் மற்றும் பலர். **மேல்முறையீட்டாளர்கள்**

எதிர்

எம்.தினகர் மற்றும் ஒருவர் **எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

தீர்ப்புரை

<u>மாண்புமிகு நீதியரசர் திரு.அனிருத்தா போஸ்.</u>

அனுமதி அளிக்கப்பட்டது

2. எங்கள் முன்புள்ள மேல்முறையீட்டாளர்கள் 1988-ஆம் ஆண்டு (1988 சட்டம்), மோட்டார் வாகனங்கள சட்டத்தின் கீழ் இழப்பீட்டிற்கான வழக்கு நடவடிக்கையின் கோருரிமையாளர்களாவர். விபத்து, 2011-ஆம் ஆண்டு பிப்ரவாரி திங்கள் 28-ஆம் நாளன்று காலை சுமார் 10.45 மணியளவில் நிகழ்ந்தது.

அதன்விளைவாக, பால பபிதா என்ற 37 வயதுடைய பெண் மரணமுற்றார் மேலும், அவரது கணவருக்கும், அவரது இளவர் மகளுக்கும் காயங்கள் ஏற்பட்டன, முதல் மேல்முறையீட்டாளர் மரணமுற்றவாரின் கணவராவார், இரண்டு மற்றும் மூன்றாம் மேல்முறையீட்டாளர்கள் அவர்களது குழந்தைகளாவர், அவர்கள் விபத்து நிகழ்ந்த காலக்கட்டத்தில் இளவர்களாவர். நான்காம் மேல்முறையீட்டாளர் மரணமுற்றவாரின் தாயார் ஆவார். முதல் மேல்முறையீட்டாளரும், மூன்றாம் மேல்முறையீட்டாளரும் மரணமுற்றவருடன் சேர்ந்து சென்னை நகரத்திலுள்ள வேளச்சோரியிலிருந்து ஆதம்பாக்கத்திற்கு ஆட்டோ ரிக்ஷாவில் பயணித்தனர், அதனை (பதிவு எண் டி.என்.-04-டபிள்யூ-6189 கொண்ட) ஒரு வாகனம் மோதியது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அந்த வாகனத்தின் உரிமையாளராவார். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர், விபத்துக்குள்ளான வாகனத்திற்கு காப்பீடு அளிக்கின்ற காப்பீட்டு நிறுவனமாகும்.

3. சென்னை, மோட்டார் வாகன விபத்துக்கோருரிமைத் தீர்ப்பாயத்தின் (தீர்ப்பாயம்) முன்பு, 1988-ஆம்ஆண்டு சட்டப்பிரிவு 166-இன் கீழ்மேல்முறையீட்டாளர்களால் உரிமைக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. விபத்திற்குள்ளான வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியது தீர்ப்பாயத்தின் முன்பு நிரூபிக்கப்பட்டது, அந்தக்காண் முடிவானது மேல்முறையீட்டில் 2018-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாளன்று மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் மாற்றியமைக்கப்படவில்லை. தற்போதைய மேல்முறையீடுகள் அத்தீர்ப்புரையிலிருந்து எழுகின்றன. தீர்ப்பாயம், 1-ஆம் மேல்முறையீட்டாளருக்கு தொகை ரூ.4,77,100/-ஐ இழப்பீடாகத் தீர்வளித்தது.

இறந்தவரின் இளவர்மகளுக்கும் 3-ஆம் மேல்முறையீட்டாளர்), முதல் மேல்முறையீட்டாளருக்கும் ரூ.2,06,000/-இழப்பீடாகத் தீர்வளிக்கப்பட்டது. மேற்படி பால பபிதாவின் மரணத்திற்கான இழப்பீட்டுத் தொகையின் அளவு ரூ.36,92,350/-எனத் தீர்ப்பாயத்தால் கணக்கிடப்பட்டது. மரணமுற்றவரின் மாத வருமானமானது, அவரது கணவரின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு கணக்கிடப்பட்டது. தீர்ப்பாயம், கணவரின் வருமானமானது, மாதமொன்றுக்கு ரூ.78,700/-எனக் கண்டறிந்தது. கணவரின் மாத வருமானம் குறித்த காண்முடிவில் உயர் நீதிமன்றம் தலையீடு செய்யவில்லை. உரிமைக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்முதற்கொண்டு தொகை செலுத்தப்படும் நாள்வரை, இழப்பீட்டுத் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7.5% வட்டி விதித்தது. தீர்வளிப்பு நாள் முதற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் தீர்வத் தொகையை வைப்பீடு செய்யும்படி உத்தரவிடப்பட்டது.

4. மரணமுற்றவருக்கும், காயமுற்றவர்களுக்கும் தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைகள் தொடர்பாக காப்பீட்டு நிறுவனமும் மேல்முறையீட்டாளர்களும் தனித்தனி மேல்முறையீடுகளை முன்கொணர்ந்தனர். உயர் நீதிமன்றமானது, முதல் மேல்முறையீட்டாளருக்கு இழப்பீடாகத் தீர்வளிக்கப்பட்ட தொகையை ரூ.3,41,000/-ஆக குறைத்தது. மூன்றாம் மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரையில், இழப்பீடாகத் தீர்வளிக்கப்பட்ட தொகை ரூ.2,06,000/-ஆனது தக்கவைத்துக்கொள்ளப்பட்டது. மரணமுற்றவரின் குடும்பத்திற்குத் தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையானது, உயர் நீதிமன்றத்தால் ரூ.32,82,090/-ஆக குறைக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அருண் குமார் அகர்வால் மற்றும் ஒருவர் -எதிர்- நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் [(2010) 9 எஸ்.சி.சி. 218] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையைப்

பின்பற்றி, தீர்ப்பாயமானது, மரணமுற்றவருடைய கணவரின் வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள அவரது கருத்தியலான வருமானத்தை மரணமுற்றவரின் குடும்பத்திலுள்ள எஞ்சரிமையர்களுக்கு இழப்பீடாக அளவிட்டிருந்தது. ஆயினும், உயர் நீதிமன்ற மானது, அவரது குடும்பத்திலுள்ள எஞ்சுரிமையர்களுக்கு தீர்வளிக்கப்படவேண்டிய நிதி இழப்பை அளவீடு செய்வதற்காக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் பணியாற்றி வந்த வேலையில் பெற்ற ஊதியத்தை அடிப்படையாகக்கொண்டு பரிசீலித்தது. தீர்ப்பாயமும் உயர் நீதிமன்றமும், நிதி இழப்புத் தொகையைக் கணக்கிடும் பொருட்டு, பெருக்கல் பலன் கோட்பாட்டினைப் பயன்படுத்தின. மரணமுற்றவரின் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு இழப்பீட்டைக் குறைத்தல் என்ற அம்சத்தின் பேரில், எங்கள் முன் வாதுரைகள் வைக்கப்பட்டுள்ளதால், நாங்கள் அந்தப் பிரச்சினைக்கு மட்டுமே எங்களது தீர்ப்புரையை வரையறுத்துக்கொள்ளவேண்டும்.

5.தீர்ப்பாயமானது, மரணமுற்றவரைக் கருத்திற்கொண்டு செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டை அளவிட்டு, கீழ்க்காணும் தலைப்புகளின்கீழ் தீர்வம் அளித்தது:

நிதி இழப்பு	:	ரூ.31,50,000/-
நல்லுறவின்இழப்பு	:	ரூ.1,00,000/-
ஈமச்சடங்கு செலவினங்கள்	:	ரூ. 25,000/-
அன்பு மற்றும் பாச இழப்பு	:	ரூ. 4,00,000/-
மருத்துவ செலவினங்கள்	:	ரூ.17, 350/-
மொத்தம்	:	ரூ.36,92,350/-

6. தீர்வத்தை மாற்றியமைக்கையில், உயர் நீதிமன்றமானது கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் இழப்பீட்டைக் கணக்கீடு செய்தது:

நிதிஇழப்பு	ரூ.30,94,740/-
நல்லுறவின் இழப்பு	ரூ.40,000.00
ஈமச்சடங்கு செலவினங்கள்	ரூ.15,000.00
கோருரிமையாளர்களின் அன்பு மற்றும் பாச இழப்பு - ரூ .25,000	ரூ.1,00,000.00
சொத்துரிமை இழப்பு	ரூ. 15,000.00
மருத்துவ செலவினங்கள்	ரூ.17,350.
மொத்தம்	ரூ.32,82,090. 00

7. மரணமுற்றவரின் மரணத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நிதி இழப்பானது, அவர் ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பணிபுரிந்தபோது ஈட்டிய வருமானத்தை அவரது தனிப்பட்ட வருமானமாக நிர்ணயித்தோ அல்லது எஞ்சுரிமையரான கணவரின் வருமானத்துடன் தொடர்புபடுத்தியோ கணக்கிடப்பட வேண்டுமா? என்பதைக் குறித்து தற்போது நாங்கள் விவாதிக்க உள்ளோம். மரணமுற்றவர் பி.காம். பட்டதாரி என்பதற்கும், அவர் 2008-ஆம் ஆண்டு வரை ஒரு நிறுவனத்தில் பணியாற்றி, மாத ஊதியமாக ரூ.34,385/- ஈட்டிவந்தார் என்பதற்கும் தீர்ப்பாயத்தின் முன்பு சான்றளிக்கப்பட்டுள்ளதால் இந்த வினா எழுந்துள்ளது. ஆயினும், விபத்து நிகழ்ந்த சமயத்தில் மரணமுற்றவர் பணியாற்றியிருக்கவில்லை.

தீர்ப்பாயம் (மேற்படி) அருண் குமார் அகர்வால் என்ற வழக்கைச் சார்ந்துநின்று இழப்பீட்டைத் தீர்மானித்தது. இந்தத் தீர்ப்புரையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது:

"35. எங்களது கருத்துப்படி, முறையான வருமானம் இல்லாதவரான மரணமுற்ற மனைவி/தாயின் சேவைகளை, வீட்டுப் பணியாளர் அல்லது வேலைக்காரர் அல்லது ஒரு குறிப்பிட்ட காலம்வரை பணியாற்றும் ஊழியர் ஆகியோரின் பணிகளுடன் ஒப்பிட்டு அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கு செலுத்தத்தக்க இழப்பீடாகக் கணக்கிடப்படும் தொகை மிகவும் நேர்மையற்றதும், நியாயமற்றதும், பொருத்தமற்றதும் ஆகும். மனைவியால்/தாயாரால், கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு செய்யப்பட்டுவரும் தன்னலமற்ற சேவைகளை, ஒரு பணியாளரின் பணிகளுடன் ஒப்பிடமுடியாது, மேலும், அவ்வாறான சேவைகளுக்கு விலை மதிப்பீடு செய்வதற்கு எந்தச் சான்றோ, தரவோ அளிப்பது சாத்தியமல்ல. ஒரு குடும்பத் தலைவியின் மறைவினால் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட கவனிப்பிலும் அக்கறையிலும் ஏற்படும் பாதிப்பின் இழப்பை பணரீதியாக அளவிடுவது உண்மையில் சாத்தியமற்றது. சட்டமன்றம், அதன் அறிவுக்குகந்த வகையில் 1994-ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடும் பொருட்டு, வருமானம் ஈட்டாத நபரின் கருத்தியலான வருமானத்தை ஆண்டுக்கு ரூ.15,000/-ஆகவும், வாழ்க்கைத் துணையாக இருக்கும்பட்சத்தில், வருமானம் ஈட்டுகின்ற/எஞ்சுரிமையரான வாழ்க்கைத் துணையின் வருமானத்தில் 1/3 பங்கையும் நிர்ணயித்துள்ளது.

8. அதற்குமாறாக, உயர் நீதிமன்றமானது, நியாயமாகவும், நேர்மையாகவும் இழப்பீடு அளிக்கும் பொருட்டு நிதி இழப்பை அளவீடு செய்தலில், மரணமுற்றவரின் மாத வருமானத்தை தொகை ரூ.34,385/- ஆக நிர்ணயிப்பது பொருத்தமானது என்பதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டது.இந்த அம்சத்தின் அடிப்படையிலான உயர் நீதிமன்றத்தின் காரணவிளக்கமாவது

> "மரணமுற்ற பால பபிதா மரணமுற்ற சமயத்தில் இல்லத்தரசியாக இருந்தபோதிலும், முன்பு அவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி, மாத வருமானமாக தொகை ரூ.34,385/- ஈட்டிவந்தார் என்பது வா.சா.ஆ. 23 & 24-லிருந்து தெளிவாகின்றது. ஆகவே, நிதி இழப்பு என்ற தலைப்பின் கீழ் நியாயமானதும் முறையானதுமான இழப்பீட்டை அளிக்கும்பொருட்டு, மரணமுற்றவரின் மாத வருமானமாக ரூ.34,385/-ஐ நிர்ணயிப்பது பொருத்தமானதாகும். தொகை ரூ.34,385/-ஐ மரணமுற்றவரின் மாத வருமானமாக எடுத்துக்கொண்டால், அதில் தனிப்பட்ட செலவு களுக்காக 50% தொகை கழிக்கப்படவேண்டும், அவ்வாறு கழிக்கப்பட்டால், குடும்பத்துக்கான பங்களிப்பானது ரூ.17,193/-ஆக கணக்கிடப்படுகிறது. விபத்து சமயத்தில் மரணமுற்றவரின் வயது 37 ஆகும்; எனவே, இவ்வழக்கில் பயன்படுத்தப்படவேண்டிய சரியான பெருக்கல் எண்ணானது 15 ஆகும். பெருக்கல் எண் 15-ஐ பயன்படுத்தி, மொத்த நிதி இழப்பானது ரூ.30,94,740/- ஆக (17,193 × 12 × 15) கணக்கிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, நிதி இழப்பு என்ற தலைப்பின் கீழ் தீர்ப்பாயத்தால் தீர்வளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.31,50,000/-, ரூ.30,94,740/-ஆக இதன்படி குறைக்கப்பட்டு மாற்றியமைக்கப்படுகிறது." (புத்தகத்திலுள்ளவாறே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது).

9. எங்களது கருத்துப்படி, இந்தக் கூறின் அடிப்படையிலான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை இரண்டு விதத்தில் பாதிப்படைகிறது. மரணமுற்றவர், மரணமுற்ற சமயத்தில் பணியில் இல்லை, அவர் இல்லத்தரசியாக இருந்தார். மேலும், விபத்து நிகழ்ந்த சமயத்தில்தான் மரணமுற்றவர் தனது பணியைத் துறந்துவிட்டார் என்பது வழக்கின் வாதமல்ல.வாதம் அவ்வாறாக இருந்தால், அந்தக் காலகட்டத்தில், அவர் பெற்ற கடைசி ஊதியமானது அவரது மாத வருமானத்தைக் கணக்கிடுவதற்கு நம்பத்தகுந்த வழிகாட்டியாக இருந்திருக்கக்கூடும். உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளபடி, இவ்வழக்கில் நிதி இழப்பு என்ற தலைப்பின் கீழ் நியாயமானதும், முறையானதுமான இழப்பீட்டை அளிக்கும் பொருட்டு மரணமுற்றவர் ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாகப் பணிபுரியாமல் இருந்துள்ளதால், அவர் அதற்கு முன்பு எவ்வளவு.தொகை ஈட்டினாரோ அதை மாத வருமானமாகக் கருதப்பட்டிருக்கக்கூடாது. அவர் பணிபுரிந்துகொண்டிருந்த காலக்கட்டத்திற்கும், விபத்து நிகழ்ந்ததற்கும் இடையே நீண்ட கால இடைவெளி இருக்கிறது. எனவே, அவர் விபத்தில் காயம் ஏற்பட்டு மரணமுற்றார் எனும்போது, அவரது கருத்தியலான வருமானத்தை நிர்ணயிப்பதற்காக ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்கு முன்பான அவரது மாத ஊதியமானது, நம்பத்தகாத வழிகாட்டியாகவே இருக்கும். மேலும், விபத்து நிகழ்ந்த சமயத்தில், அவர் அவரது குடும்பத்தைக் கவனித்துக் காத்துவந்த இல்லத்தரசி ஆவார்.எங்களது கருத்துப்படி, இத்தருணத்தில், (மேற்படி) அருண் குமார் அகர்வால் என்ற வழக்கில் வகுத்துரைக்கப் பட்டுள்ள கணக்கீட்டு முறையைச் செயற்படுத்துவது மிகவும் உகந்ததாகும், அதையே தீர்ப்பாயம் செய்துள்ளது.

10. மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தின் முன்பு அவர் கடைசியாக பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் நிதி இழப்பைக் கணக்கிடவேண்டும் என்பதான வழக்கை நடத்தியிருந்ததால், (மேற்படி) அருண்குமார் அகர்வால் என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ள முறையிலேயே அவர் மரணமுற்றவரின் வருமானத்தைக் கணக்கிடுவதற்கான நிலைப்பாட்டை எடுக்க இயலாது என்று காப்பீட்டு நிறுவனத்தின் சார்பாக எங்கள் முன்பு வாதுரைக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்கள், உயர் நீதிமன்றத்தின் முன்பு மரணமுற்றவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் தங்களது உரிமைக்கோரிக்கையை வலியுறுத்தினர் என்பதால் மட்டுமே, இந்நீதிமன்றம் அவ்வாதுரையின் மீது தனது தீர்முடிவை நிலைநிறுத்தியிருக்கக்கூடாது. உரிமைக்கோரிக்கையின் தன்மையை ஆராய்ந்து, வெவ்வேறு அளவுகோலைப் பயன்படுத்தி, வெவ்வேறு முறையில் இழப்பீட்டைக் கணக்கிடுவது என்பது இந்நீதிமன்றத்தின் முடிவுக்குட்பட்டது. இதற்கான குறிப்பிட்ட காரணம் யாதென்றால், மரணமுற்றவரின் கணவரின் மாத வருமானச் சான்று உட்பட பதிவிலுள்ள சான்றாதாரங்களின் அடிப்படையில் அத்தகைய இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்படலாம் என்றாலும், அவ்வாறு பயன்படுத்தப்படும் அளவுகோலானது, நிதி இழப்பைக் கணக்கிடுவதற்கான ஒரு சட்டமுறையாக சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில், கணவரின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் இழப்பீட்டைக் கணக்கிடும்படி கோருரிமை மனுவில் வாதுரைக்கப்பட்டது. மேல்முறையீடுகளுக்கான சிறப்பு அனுமதி மனுக்களிலும், பால பபிதாவின் மரணத்திற்கான இழப்பீடானது, அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தின் அடிப்படையிலோ அல்லது அவரது கணவரின் வருமானத்தின் அடிப்படையிலோ கணக்கிடப்படலாமா?என்பதான கூறுகளில் ஒன்று வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

11. 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டம், பிரிவு 168-இல் வரையறுப்பதாவது:

"168. கோருரிமைத் தீர்ப்பாயத்தின் தீர்வம்-கோருரிமைத் தீர்ப்பாயம், பிரிவு 166-இன் கீழ் இழப்பீடு கோரும் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன்பேரில், காப்பீடு அளித்தவருக்கு விண்ணப்பம் குறித்த அறிவிப்பு அனுப்பியும், (காப்பீடு செய்தவர் உட்பட) தரப்பினர்களின் வாதங்களைக் கேட்க வாய்ப்பளித்தும், அவ்வுரிமைக் கோரிக்கைக்கும் அல்லது நேர்வுக்கேற்ப ஒவ்வொரு உரிமைக் கோரிக்கைகளுக்கும் விசாரணை நடத்தவேண்டும், மேலும், பிரிவு 163-இன் கீழான வகையங்களுக்குட்பட்டு நியாயமாகத் தோன்றும் இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானித்து, இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படவேண்டிய நபர் அல்லது நபர்களைக் குறிப்பிட்டு தீர்வளிக்கலாம்.தீர்ப்பாயம் அத்தகைய தீர்வம் அளிக்கும்போது, காப்பீடு அளித்தவராலோ அல்லது உரிமையாளராலோ அல்லது விபத்துக்குள்ளான வாகனத்தின் ஓட்டுநராலோ அல்லது அவர்கள் அனைவருமாலோ அல்லது அவர்களில் எவரேனும் ஒருவராலோ நேர்வுக்கேற்ப செலுத்தப்படவேண்டிய தொகையைக் குறிப்பிடவேண்டும்:

.....

(2) கோருரிமைத் தீர்ப்பாயம், தீர்வத்தின் நகல்களை தொடர்புடைய தரப்பினர்களுக்கு எவ்வாறாயினும் தீர்வளிக்கப்பட்ட நாள்முதல் பதினைந்து நாட்களுக்குள் விரைந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் தீர்வளிக்கப்படுகிறபோது, அத்தீர்வத்தின்படி தொகை ஏதும் செலுத்தவேண்டிய நபர், கோருரிமைத் தீர்ப்பாயத்தால் தீர்வளிப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் கோருரிமைத் தீர்ப்பாயம் உத்தரவிடும் அத்தகைய முறையில் தீர்வத் தொகை முழுவதையும் வைப்பீடு செய்யவேண்டும். "

12. மேற்படி வகையமானது, விபத்தின் காரணமாக நிகழ்ந்த மரணங்கள் மற்றும் காயங்களின் காரணமாக எழுகின்ற கோருரிமைகள் குறித்து விசாரித்து, அதற்கு நியாயமானதெனத் தெரிகிற இழப்பீட்டைத் தீர்மானித்து தீர்வளிக்கும் அதிகாரத்தையும், அதிகாரவரம்பையும் தீர்ப்பாயத்திற்கு அளிக்கிறது.தீர்ப்பாயமோ, மேல்முறையீட்டு நீதிமன்றமோ இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்கு பரிசீலிக்கப்படவேண்டிய காரணக்கூறுகளைப் பொறுத்த வரையில், அதன் விசாரணையைக் கோருரிமையாளரின் வேண்டுகோள்களுக்கேற்ப சுருக்கிக்கொள்ளும் நேர்வில், அது சட்ட நோக்கத்தையே சிதைத்துவிடும்.மேற்படி வகையத்தின் கீழ் விசாரணை நடத்த அதிகாரமிருப்பதாக அவ்வாறு வரையறுக்கப்பட்ட முறையில் பொருள்கொள்ள முடியாது.எந்தக் காரணிகளின் பேரில் உரிமைக் கோரிக்கையின் அளவீடு கோரப்பட்டுள்ளதோ, அவை நிலைநிறுத்தப்படமுடியாது என்றால், வழக்கு நடவடிக்கையின்போது, எதனை அடிப்படையாகக்கொண்டு கோரிக்கை செய்யப்படுகிறதோ அதனைத் தவிர்த்து வேறொரு குறிப்பிட்ட அளவின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டை, வெளிக்கொண்டுவரப்பட்ட சான்றாவணங்கள் நியாயப்படுத்தும் என்றாலுங்கூட, 1988-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங்கும் நீதிமன்றம், நியாயமான இழப்பீட்டை முடிவு செய்வதற்கான அதன் அதிகாரத்தை நீக்கிக்கொள்ளும்.

தற்போதைய வழக்கில், தீர்ப்பாயமானது, மேல்முறையீட்டாளர்கள்/ கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டைத் தீர்வளிப்பதற்கு முற்படுகையில், (மேற்படி)அருண் குமார் அகர்வால் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள கோட்பாட்டினைச் சார்ந்து நின்றது என்றும், மரணமுற்றவரின் கணவரின் வருமானத்தை மதிப்பிடும் சான்று தீர்ப்பாயத்திடம் உள்ளது என்றும் நாங்கள் அறிகிறோம்.உள்ளபடியே, முதல் மேல்முறையீட்டாளரின் இழப்பீடானது, முக்கியமான காலக்கட்டத்தில் அவரது வருமானத்தைக் கருத்திற்கொண்டே அளவிடப்பட்டது. எங்களது கருத்துப்படி, மரணமுற்றவர் விபத்தில் பலியாவதற்கு ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் பெற்ற வருமானத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கக்கூடாது. மரணமுற்றவரின் கணவரின் வருமானத்தை அவரது கருத்தியலான வருமானமாக நிர்ணயித்த தீர்ப்பாயம், முற்றிலும் ஓர் ஊகமான முடிவை எடுக்கவில்லை. கோருரிமை மனுவில் ஏற்கெனவே கருத்துரைத்துள்ளபடி, "மரணமுற்றவரின் தொழில்" என்ற கட்டத்தில், மரணமுற்றவரின் வருமானமானது அவரது கணவரின் வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப் படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தீர்ப்பாயமானது, (மேற்படி) அருண் குமார் அகர்வால் என்ற வழக்கில் வகுத்துரைக்கப் பட்டுள்ள நடைமுறையைச் சரியாகவே பின்பற்றியிருந்தது.அது இந்தக் குறிப்பிடப்பட்ட சங்கதிகளின்படி, நிதி இழப்பை அளவிடுவதற்கு மிகவும் உறுதியானதும் நம்பத்தக்கதுமான ஒரு முறையை வகுத்துள்ளது.

13. மரணமுற்றவரின் தனிப்பட்ட செலவினத்தின் பேரில் கழிக்கப்படவேண்டிய தொகையைப் பொறுத்தவரையில், (திருமதி) சரளா வர்மா மற்றும் பலர் எதிர்-தில்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர் [(2009) 6 எஸ்.சி.சி.121] என்ற வழக்கைப் பின்பற்றிய தீர்ப்பாயம், மரணமுற்றவரின் வருமானத்தில் 1/3 பங்கை கழிக்கும்படியும் அதை அவரது வாழ்க்கைத்துணையின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டே தீர்மானிக்கவேண்டும் எனவும்

உத்தரவிட்டது.அதுவே, எங்களது கருத்துப்படி சரியான நடைமுறையாகும். அவ்வாறு நாங்கள் தீர்மானிப்பதற்கான காரணம் யாதெனில், மரணமுற்றவரின் கணவரை, சார்ந்திருப்பவராகக் கருதாமல் விட்டுவிட்டாலுங்கூட, அந்த முக்கியமான காலக்கட்டத்தில் சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினராக கருதப்பட்டிருக்கவேண்டிய இரு இளவர் குழந்தைகள் இருந்தனர்.அந்தக் காலக்கட்டத்தில், இரண்டாம் மேல்முறையீட்டாளரின் வயது பன்னிரண்டாகவும், காயமுற்ற மகளின் வயது மூன்றாகவும் இருந்தது.(மேற்படி) சரளா வர்மா என்ற வழக்கில், சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் உள்ள சூழ்நிலையில் கழிப்புத் தொகை யானது, செல்லத்தக்கதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 'சார்ந்து வாழ்பவர் "என்ற சொற்றொடரை, நிதிவகையில் மட்டுமே சார்ந்து வாழ்பவர் என்ற பொருள்படுமாறு நாங்கள் வரையறுக்கமுடியாது. இளவர் குழந்தைகள் உணர்வுப்பூர்வ மாகவும் தாயைச் சார்ந்திருப்பவர்களாவர். அவர்கள் மிகவும் இளவயதிலேயே தங்களது தாயின் கவனிப்பையும், வழிகாட்டலையும் இழந்துவிட்டனர். நியாயமான இழப்பீட்டை எட்டுவதற்கு தீர்ப்பாயம் இவ்வரையறைகளின்படி சார்ந்துள்ளோரின் இழப்பின் கீழ் ஒரு காரணியை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

14. நிதி இழப்பைக் கணக்கிடும்பொருட்டு உயர் நீதிமன்றம் 50% தொகையைக் கழித்ததற்கான எந்தக் காரணத்தையும் அளிக்கவில்லை, இது ஒரு சரியான கருத்துரையாக நாங்கள் எண்ணவில்லை. (மேற்படி) சரளா வர்மா என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின் அடிப்படையில், மரணமுற்றவரின் வரையறுக்கப்பட்ட வருமானத்திலிருந்து 1/3 பங்கை தனிப்பட்ட செலவினங்களுக்காகக் கழிப்பது செல்லத்தக்கது என்று நாங்கள் கருதுகின்றோம். மேலும், நிதி இழப்பின் அளவை முடிவு செய்வதற்கு, தீர்ப்பாயமோ அல்லது உயர் நீதிமன்றமோ வருங்கால வாய்ப்பு வளங்களின் இழப்பு குறித்து பரிசீலிக்கவேயில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

மரணமுற்றவரின் வருமானம் கருத்தியலான வருமானத்தின் அடிப்படையில் எட்டப்பட்டிருக்கும் நேர்விலுங்கூட, நிதி இழப்பு என்ற தலைப்பின் கீழ் இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான ஒரு காரணியாக வருங்கால வாய்ப்பு வளங்களின் இழப்பு சேர்க்கப்பட்டுள்ளதாக ராஜேந்திர சிங் மற்றும் பலர் எதிர்-நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் [(2020) 7 எஸ்.சி.சி.256] என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புரையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது:

> "11.எனவே, முதலில் மரணமுற்றவரின் கருத்தியலான வருமானமானது, இறப்பின்போது மாதமொன்றுக்கு ரூ .5,000/-ஆக தீர்மானிக்கப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில், தனிப்பட்ட செலவினங்களின் பொருட்டு 1/4 பங்கான அதாவது, ரூ .15,000/-ஐ கழித்து, பெருக்கல் எண் 17- ஐ பயன்படுத்தி இழப்பீட்டை ரூ.7,65,000/-ஆக மதிப்பிட்டுள்ளது. மரணமுற்றவர் உயிர்பிழைத்திருந்தால், லதா வாத்வா (லதா வாத்வா -எதிர்-பீகார் மாநில அரசு, (2001) 8 எஸ்.சி.சி.197 என்ற வழக்கில் கருத்துரைத்துள்ளபடி குடும்பத்தைக் கவனிப்பதிலும், அதன் நலனுக்காகவும், பிள்ளைகளை வளர்ப்பதிலும் ஒரு பக்குவம்பெற்ற சாமர்த்தியசாலியான குடும்பத் தலைவியாக அவரது பங்களிப்பில் அவரது திறமைகள் காலப்போக்கில்தான் அதிகரிக்கக்கூடும், அந்தக் காரணத்திற்காகவே, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள குடும்ப நல்லுறவின் இழப்பு மற்றும் எதிர்கால செலவினங்களுடன் சேர்த்து கூடுதலாக வருங்கால வாய்ப்பு வளங்களுக்காக 40%-ஐ மேல்முறையீட்டாளர்கள் பெறுவதற்குரியவராவர் என்று நாங்கள் முடிவு செய்கிறோம். எனவே, நாங்கள் முதல் மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளருக்கு செலுத்தத்தக்க மொத்த இழப்பீட்டை ரூ.11,96,000/-ஆக மதிப்பிட்டுள்ளோம்.

15. மரணமுற்றவர் மரணமடைந்த சமயத்தில் 37 வயதுடையவராக இருந்தார். எனவே, மரணமுற்றவர் 40 வயதிற்கும் குறைவாகயிருந்ததால், வருங்கால வாய்ப்பு வளங்களின்பொருட்டு மரணமுற்றவரின் கருத்தியலான வருமானத்தில் கூடுதலாக 40%-ஐ சேர்த்திருக்கவேண்டும். இவ்வழக்கில் பெருக்கல் எண் 15 பயன்படுத்தப்படவேண்டும் என்பதில் பிரச்சினை இல்லை. இச்சூழ்நிலைகளில், நிதி இழப்பு என்ற தலைப்பின் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு உரிமையான மொத்தத்தொகை பின்வருமாறு:

மரணமுற்றவாரின் மாத வருமானம்	ரூ. 26,250/-
வருங்கால வாய்ப்புவளங்கள் (கருத்தியலான) வருமானத்தில் 40% என்ற விதத்தில்	ரூ.26,250x40/100 = ரூ.10,500/- (ரூ.26,250+ரூ.10,500=ரூ. 36,750/-)
தனிப்பட்ட வாழ்க்கைச் செலவினங்களுக்காக 1/3 பங்கை கழித்தல்	ரூ.36,750x1/3 = ரூ.12,250 / (ரூ.36,750 -ரூ.12,250 = ரூ.24,500 /
மரணமுற்றவாரின் மொத்த நிதி இழப்பு (பெருக்கல் எண்15-ஐ கொண்டு)	ரூ.24,500 x 12 x 15 = ரூ.44,10,000/-

16. நாங்கள் அதற்கிணங்க, பால பபிதா என்பவரின் இறப்பு காரணமாக ஏற்பட்டுள்ள நிதி இழப்புத் தொகையை ரூ.30,94,740/-ஆக கணக்கிட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவு செய்கிறோம். மேற்படி தொகையை ரூ.44,10,000/-என நாங்கள் கணக்கிட்டுள்ளோம்.

17. அன்பு மற்றும் பாச இழப்பு காரணமாக தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையானது, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்-எதிர்-சதிந்தர் கவுர் என்கின்ற சத்விந்தர் கவுர் மற்றும் பலர் [(2021) 11 எஸ்.சி.சி .780] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் கருத்திற்கு மாறாக உள்ளது என்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களின் சார்பாக வாதுரைக்கப் பட்டது.அன்பு மற்றும் பாச இழப்பானது நல்லுறவின் இழப்புக்குள் அடங்கிவிடுகிறது என்றும், அன்பு மற்றும் பாச இழப்பு என்பதைத் தனி தலைப்பாகக்கொண்டு இழப்பீடு தீர்வளிப்பதில் நியாயமில்லை என்றும் இத்தீர் முடிவில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்ப்புரையிலிருந்து தொடர்புடைய பத்திகள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

> " 34. இத்தருணத்தில், நல்லுறவின் இழப்புக்காகவும், அன்பு மற்றும் பாச இழப்புக்காகவும் இழப்பீடு வழங்குவதில் ஒரே சீரான முறையைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது என நாங்கள் கருதுகின்றோம். பல்வேறு தீர்ப்பாயங்களாலும், உயர் நீதிமன்றங்களாலும் நல்லுறவின் இழப்பு, அன்பு மற்றும் பாச இழப்பு என்ற இவ்விரண்டுக்குமே இழப்பீடு தீர்வளிக்கப்பட்டுள்ளன. பிரணய் சேதி என்ற வழக்கில் அரசமைப்பு நீதியராயமானது, இழப்பீடு தீர்வளிக்கப்படவேண்டிய வழக்கமான மூன்று தலைப்புகளான, சொத்துரிமை இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமச்சடங்கு செலவினங்கள் இழப்பு ஆகியவற்றிற்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது. மேக்மா ஜெனரல் என்ற வழக்கில், வாழ்க்கைத்துணை நல்லுறவு, பெற்றோர்களின் நல்லுறவு மற்றும் மகவுரிமை சார்ந்த நல்லுறவு போன்ற நல்லுறவுக்கு இந்நீதிமன்றம் ஒரு விரிவான பொருள்விளக்கத்தை அளித்துள்ளது. அன்பு மற்றும் பாச இழப்பானது, நல்லுறவு இழப்பில் அடங்கியுள்ளது என்பதாகும்.

35. சட்டப்படி ஒரு வழக்கமான தலைப்பாக விளங்கும் நல்லுறவின் இழப்புக்கான இழப்பீட்டைத் தீர்வளிக்க தீர்ப்பாயங்களுக்கும், உயர் நீதிமன்றங்களுக்கும் உத்தரவிடப்படுகின்றது. அன்பு மற்றும் பாச இழப்பு என்ற தனித் தலைப்பின் கீழ் இழப்பீட்டைத் தீர்வளிப்பதற்கான அதிகாரவரம்பு ஏதுமில்லை. "

18. எதிர்மேல்முறையீட்டாளர்களால் முன்வைக்கப் பட்ட இவ்வாதுரைகளை நாங்கள் ஏற்கின்றோம். எனவே, உயர் நீதிமன்றமானது, அன்பு மற்றும் பாச இழப்பு என்ற தலைப்பின் கீழும், நல்லுறவு இழப்பு என்ற தலைப்பின் கீழும் இழப்பீட்டை அளித்ததில் சட்டப்பிழை புரிந்துவிட்டது. மாறாக, நல்லுறவு இழப்பு என்ற தலைப்பின் கீழ் அன்பு மற்றும் பாச இழப்பை உள்ளடக்கி ஒவ்வொரு மேல்முறை யீட்டாளருக்கும் ரூ.40,000/-இழப்பீடு அளிக்க வேண்டும் என்பதே எங்களது கருத்தாகும். எனவே, இத்தலைப்பின் கீழ் அளிக்கப்பட்டுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகையானது ரூ.1,60,000/- ஆகும்.அதற்கிணங்க, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையிலுள்ள அப்பகுதி மாற்றியமைக்கப்படுகின்றது.

19. மற்ற தலைப்புகளின் கீழ் கணக்கிடப்பட வேண்டிய இழப்பீட்டைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்தின் காண்முடிவில் தலையிடுவதற்கான காரணம் ஏதும் நாங்கள் காணவில்லை. தீர்ப்பாயத்தாலும் உயர் நீதிமன்றத்தாலும் ஆண்டொன்றுக்கு 7.5% வட்டி தீர்வளிக்கப்பட்டுள்ளது.வட்டி வீதத்தின்பேரில் உயர் நீதிமன்றத்தின் மற்றும் தீர்ப்பாயத்தின் ஒருங்கியல்வான கருத்துகளில் நாங்கள் தலையிடவில்லை.வட்டி வீதத்தை உயர்த்துவதற்கான மேல்முறையீட்டாளர்களின் வாதத்திற்கு ஆதரவாக சில தீர்வறிக்கைகள் மேற்கோள் காட்டப்பட்டன.

[(2001) 2 எஸ்.சி.சி. 9] -இல் வெளியிடப்பட்டுள்ள முதலாவது தீர்வறிக்கை, 20.3.1986 அன்று நிகழ்ந்த விபத்து தொடர்புடையது.[(2009) 8 எஸ்.சி.சி. 507] -இல் வெளியிடப்பட்ட அடுத்த தீர்வறிக்கை, தீ விபத்தினால் ஏற்பட்ட சரக்குகளின் இழப்பின்பேரிலான காப்பீட்டுக் கோருரிமை தொடர்புடையதாகும், அவ்வழக்கில் விபத்து நிகழ்ந்த நாளானது 24.8.1999 ஆகும்.காலப்போக்கில் வங்கியின் வட்டி வீதம் படிப்படியாகக் குறைந்துவிட்டதால், மேல்முறையீட்டில் அந்த அம்சத்தைப் பொறுத்தவரை நாங்கள் தீர்ப்பாயம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்வத்தை நிலைநிறுத்துகிறோம்.

எனவே, பால பபிதா இறந்ததற்காக மேல்முறையீட்டாளர்களுக்கு செலுத்தத்தக்க மொத்தத் தொகை யானது பின்வருமாறு:

நிதி இழப்பு	ரூ.44,10, 000/-
நல்லுறவின் இழப்பு	ரூ.1, 60,000/-
ஈமச்சடங்கு செலவினங்கள்	ரூ.15,000/-
சொத்துாரிமை இழப்பு	ரூ. 15,000/-
மருத்துவ செலவினங்கள்	ரூ.17,350/-
மொத்தம்	ரூ.46,17, 350/- .

20.4-ஆம் மேல்முறையீட்டாளரை (அதாவது மரணமுற்றவரின் தாய்) தவிர்த்து, உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ள வீதத்தின்படி, மேற்படி தொகையானது மேல்முறையீட்டாளர்களுக்கு செலுத்தப்படவேண்டும்; மேலும், உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளபடி, ரூ .1,00,000/-க்கு பதிலாக மொத்தமாக ரூ .2,00,000/-ஐ செலுத்த நாங்கள் உத்தரவிடுகின்றோம்.மேற்படி தொகையானது, மேல்முறையீட்டாளர்களுக்கு ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள தொகையிலிருந்து சரிகட்டி, தீர்ப்புரை நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.இந்தத் தீர்ப்புரை மற்றும் உத்தரவின்படி, கோருரிமை மனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தொகை செலுத்தப்படும் நாள்வரை செலுத்தப்படாத தொகை ஆண்டொன்றுக்கு 7.5% என்ற வீதத்தில் வட்டி பெறும்.

21. மேல்முறையீடுகள், செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமின்றி, மேற்படி நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகின்றன.

22. விண்ணப்பம் (கள்) ஏதும் நிலுவையிலிருப்பின் அவை தீர்வு செய்யப்படும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி
மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ்

புதுதில்லி
11.07.2022

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "